*புதுச்சேரி அரசு*
*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **30 ஏப்ரல், 2022**

## மே தின வாழ்த்துச் செய்தி

ஒவ்வொரு ஆண்டும் மே முதல் சர்வதேச உழைப்பாளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. உழைக்கும் மக்களின் பெருமையையும் தியாகத்தையும் உலகிற்குப் பறைசாற்றும் இந்த நன்னாளில் உலகமெங்கும் உள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் மே தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உழைப்பாளர்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். பொருளாதார முன்னேற்றத்தின் அச்சாணியாக இருப்பவர்கள். அவர்களுடைய வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க அனைத்து நிலையிலும் புதுச்சேரி அரசு துணை நிற்கும்.

உழைக்கும் மக்கள் அனைவரும் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.